## மாநில சுயாட்சியை வென்றெடுக்கும்

# மக்களுக்கான அரசு ஒன்றியத்தில் அமைய ஓய்வின்றி உழைப்போம்!

## வலைதளப் பதிவில்- முதல்வர் மு.க.ஸ்டாலின் சூளுரை!

**மாட்ரிட், (ஸ்பெயின்) பிப். 4-**

**கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று, தமிழ்நாட்டின் தலைமகனான, பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களின் 55வது நினைவு நாளையொட்டி, ஸ்பெயின் நாட்டின், மாட்ரிட் நகரில் தாம் தங்கியுள்ள இடத்தில், அண்ணா திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து வணங்கினார்.**

**இந்நாளில் அவர் விடுத்த சமூக வலைதளப் பதிவில், "மாநில சுயாட்சியை வென்றெடுக்கும் மக்களுக்கான அரசு, ஒன்றியத்தில் அமைய ஓய்வின்றி உழைக்க வேண்டும்!" என்று குறிப்பிட்டுள்ளார்.**

பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவு நாளையொட்டி முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளத்தில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு:-

தமிழ்த்தாயின் தலைமகனாகப் பிறந்து, நமக்கெல்லாம் அண்ணனாக அறிவு மன்னனாக வழிகாட்டிய பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களின் நினைவுநாள்!

இன்று அமைதிப் பேரணியாகச் சென்ற கழக உடன்பிறப்புகள், பேரறிஞர்



அண்ணா சொன்ன கடமை கண்ணியம் கட்டுப்பாட்டோடு உழைத்து மாநில சுயாட்சியை வென்றெடுக்கும் மக்களுக்கான அரசு ஒன்றியத்தில் அமைய ஓய்வின்றி உழைக்க வேண்டும்!

**எண்ணித் துணிக கருமம்!**

இவ்வாறு தமது சமூக வலைதளப் பதிவில், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.



2024 நாடாளுமன்றத் தேர்தலை முன்னிட்டு கழக நாடாளுமன்றத் தேர்தல் மேற்பார்வை மற்றும் ஒருங்கிணைப்புக் குழுவின் ஆலோசனைக் கூட்டம் தொடர்ச்சியாக நடைபெற்று வருகிறது. விழுப்புரம் மக்களவைத் தொகுதிக்குட்பட்ட கழக நிர்வாகிகளை அண்ணா அறிவாலயத்தில் உள்ள கலைஞர் அரங்கில் நேற்று முன்தினம் சந்தித்து கலந்துரையாடல் நடைபெற்றது. இதில். திராவிட மாடல் அரசின் திட்டங்களை மக்களிடம் கொண்டு செல்வது தொகுதியில் நிலவும் சூழல் – பாக முகவர்களின் பணிகள் உள்ளிட்டவை குறித்து மாவட்ட அமைச்சர் – மாவட்டக் கழகச் செயலாளர்கள் – சட்டமன்ற உறுப்பினர்கள் – மாவட்ட – ஒன்றிய – நகர – பேரூர் கழக நிர்வாகிகள் – உள்ளாட்சிப் பிரதிநிதிகளிடம் பல்வேறு விதமான கருத்துகளை கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கேட்டறிந்தார்.

## நெல்லை மாவட்டம் – வண்ணார்பேட்டையில்

# மனிதநேய நிறைவு விழா! மாணவர்களுக்கு பாராட்டு சான்றிதழ்!

## சட்டப் பேரவைத் தலைவர் மு.அப்பாவு வழங்கினார்!

நெல்லை.பிப்.4-

நெல்லை மாவட்டம் வண்ணார் பேட்டை பிரான்சிஸ் சேவியர் பொறியியல் கல்லூரி நடைபெற்ற மனிதநேய வார நிறைவு விழாவில் கடந்த ஆண்டில் 10ம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு பொது தேர்வில் 100 சதவீத தேர்ச்சி விழுக்காடு வழங்கிய பாடம் ஆசிரியர்கள் மற்றும் பல்வேறு போட்டிகள் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பாராட்டு சான்றிதழ்களை சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு,மாநகராட்சி துணை மேயர் ராஜு,மாவட்ட வருவாய் அலுவலர் சுகன்யா ஆகியோர் முன்னிலையில் வழங்கி பாராட்டினார்.

பின்னர் சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு தெரிவித்ததாவது.

மனிதநேய வார விழா ஆதிதிராவிடர் நலத்துறை சார்பில் நடத்தக்கூடிய ஒரு விழாவாகும்.ஒவ்வொரு ஆண்டும் இவ்விழா நடத்தப்படுகிறது.ஜனவரி மாதம் கடைசி வாரம் மனிதநேய வாரம் என்று கொண்டாடப்படுகிறது.சமூக நீதியை வலியுறுத்துவதே இந்நிகழ்ச்சியின் முக்கிய நோக்கமாகும்.1795 ஆம் ஆண்டு வரை சமூகத்தில் பிற்படுத்தப்பட்டோர்கள், மிகவும் பிற்படுத்தப்பட்டோர்கள், தாழ்த்தப்பட்டவர்கள் படிக்க முடியாத சூழ்நிலையில் இருந்தோம் மற்றும் விவசாயம் பணிகளை மேற்கொள்வதற்கும் தொழில் தொடங்குவதற்கும் நிலம் வாங்க முடியாத சூழ்நிலையில் இருந்தோம்.1835 ஆம் ஆண்டு அனைவரும் கல்வி படிக்கலாம் என சட்டம் கொண்டுவரப்பட்டது.

தந்தை பெரியார் அவர்கள் ஜாதி, மதத்தை கடந்து அனைவரும் சமம் என போற்றி பெண்கள் கல்விக்கு மிகவும் முக்கியத்துவம் கொடுத்தார்கள். தொடர்ந்து காமராஜர் அவர்கள் அதிகமாக பள்ளிகளை திறந்து கல்வியில் புரட்சி ஏற்படுத்தினார்கள். இவர்களை தொடர்ந்து பேரறிஞர் அண்ணா,முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் கல்வி கற்பதற்கு ஊக்கத்தொகை வழங்கி பெண்கள் கல்வியை ஊக்கப்படுத்தினார்கள்.

இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் உயர்கல்வி பயிலும் பெண்கள் 72 சதவீதமாகும்.முதல் முதலாக தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வேலை வாய்ப்பிலும்,கல்வியிலும் 10 சதவீத இட ஒதுக்கீட்டை இந்திய அரசியலமைப்பு

சட்டத்தில் கொண்டு வந்தவர் அண்ணல் அம்பேத்கர் அவர்கள்.இட ஒதுக்கீடு உரிமையை பெற்று தந்தவர் அண்ணல் அம்பேத்கர் அவர்கள். அதன் பிறகு இந்திய அரசியலமைப்பு சட்டத்தில் இருந்து இட ஒதுக்கீட்டை ரத்து செய்த போது போராடி மீண்டும் இட ஒதுக்கீட்டை கொண்டு வந்தது, தமிழ்நாடு தான்.திராவிட தலைவர்கள் தான். தொடர்ந்து முதலமைச்சர் அவர்கள் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும்,ஆதி திராவிடர் நல பள்ளிகளுக்கும் மற்றும் விடுதிகளுக்கும் பல்வேறு நலத்திட்டங்களை செய்து கொடுத்துள்ளார்கள்.

இவ்வாறு பேரவைத் தலைவர் மு.அப்பாவு தெரிவித்தார்.

இந்நிகழ்வில் மாவட்ட ஆதி திராவிடர் நல அலுவலர் பென்னட் ஆசிர், ஆதிதிராவிடர் நலக்குழு உறுப்பினர்கள் குருவையா, மணிமொழியன், செல்லத்துரை,சமுத்திரம்,தலைமைச் செயற்குழு உறுப்பினர் சித்திக்,ஒன்றிய செயலாளர்கள் ஜோசப் பெல்சி,ராஜன், உள்பட ஆசிரியர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## தி.மு.க. 15ஆவது பொதுத் தேர்தல்

# கடலூர் மேற்கு மாவட்டம்

### நெல்லிக்குப்பம் நகர அவைத்தலைவர்

### பொறுப்புக்கான தேர்தல் வேட்புமனு தாக்கல்

## தலைமைக் கழக அறிவிப்பு

**திராவிட முன்னேற்றக் கழகத்தின் 15வது பொதுத் தேர்தலில், கடலூர் மேற்கு மாவட்டம், நெல்லிக்குப்பம் நகர அவைத்தலைவராக உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்ட ஷேக்முகைய்தீன் (எ) சித்திக் அவர்கள் மறைவெய்திய காரணத்தால்;**

**கடலூர் மேற்கு மாவட்டம், நெல்லிக்குப்பம் நகர அவைத்தலைவர் பொறுப்புக்கான தேர்தல் நடைபெற உள்ளதையொட்டி, இப்பொறுப்புக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து 2024, பிப்ரவரி 6 (செவ்வாய் கிழமை) அன்று ரூ.1000/–வீதம் தலைமைக் கழகத்தில் அளித்து இரசீது பெற்றுக் கொள்ள வேண்டும்.**

### தகுதி விவரம்

**நகரக் கழக நிர்வாகப் பொறுப்புக்குப் போட்டியிடுவோர் அவர்கள் வேட்புமனுக்களில் முன்மொழிபவரும், வழிமொழிபவரும் அந்த நகரத்திற்குட்பட்ட வார்டுகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட வார்டு செயலாளராகவோ, பிரதிநிதியாகவோ இருத்தல் வேண்டும்.**

**வேட்புமனு விண்ணப்பப் படிவம் ஒன்றுக்கு ரூ.25/– வீதம் தலைமைக் கழகத்தில் கட்டணம் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.**

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 600 018
நாள்- 2.2.2024

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.



பேரறிஞர் அண்ணா அவர்களின் 55 வது நினைவு தினத்தை முன்னிட்டு நெல்லை சந்திப்பு பகுதியில் உள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவசிலைக்கு நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா.ஆவுடையப்பன் தலைமையில் நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம். மைதீன் கான் முன்னிலையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.நிகழ்வில் சுப்பிரமணியின்,சுப.சீதாராமன், மாலைராஜா,ஆவின் ஆறுமுகம், விஜிலா சத்தியானந்த்,மேயர் சரவணன்,துணை மேயர் ராஜ், சுரேஷ்,பரமசிவஜயப்பன், செல்வ சூடாமணி,உலகநாதன், மீரான்மைதீன்,கவிஞர் மூர்த்தி, உள்பட கழக நிர்வாகிகள் திரளாக கலந்து கொண்டனர்.

## பொதுவிநியோகத் திட்டப் பணிகள் - சம்பா பருவ நெல் கொள்முதல் பணிகளை மேற்கொள்ள

# அனைத்து உணவு - உணவுப் பொருள் வழங்கல் துறை அதிகாரிகளுக்கு அறிவுரை!

## அமைச்சர் அர.சக்கரபாணி வழங்கினார்!

சென்னை, பிப்.4-

பொது விநியோகத் திட்டப் பணிகள் மற்றும் சம்பா பருவ நெல் கொள்முதல் பணிகளைத் திறம்பட ஆற்றிட அனைத்து உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அதிகாரிகளுக்கு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி அறிவுரை வழங்கினார்.

உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி தலைமையில் உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறையின் அலுவலர்கள், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக மண்டல மேலாளர்கள் மற்றும் தரக்கட்டுப்பாட்டு மேலாளர்கள், பொது விநியோகத் திட்ட துணைப் பதிவாளர்கள் மற்றும் குடிமைப்பொருள் வழங்கல் மற்றும் குற்றப்புலனாய்வுத் துறை அலுவலர்களின் ஒருங்கிணைந்த ஆய்வுக் கூட்டம் 01.02.2024 சென்னை கோட்டூர்புரத்தில் அமைந்துள்ள அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் நடைபெற்றது.

**சிறுதானியக் கண்காட்சி!**

கூட்டத்தின் துவக்கத்தில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் புதிதாகத் தோற்றுவிக்கப்பட்ட 6 மண்டலங்களின் பயன்பாட்டிற்காக ரூ.61.93 லட்சம் மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்பட்ட 7 ஈப்புகளை மண்டல மேலாளர்களிடம் வழங்கினார். பின்பு கூட்ட அரங்கில் அமைக்கப்பட்டிருந்த சிறுதானியக் கண்காட்சியைப் பார்வையிட்டார்.

வெள்ள நிவாரணம் வழங்கல் மற்றும் பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்கல் ஆகிய பணிகளைக் குறுகிய காலத்தில் சிறப்பாகச் செய்த அனைத்து அலுவலர்களுக்கும் குறிப்பாகப் பொது விநியோகத் திட்ட அங்காடிகளின் விற்பனையாளர்கள் மற்றும் கட்டுனர்களுக்கும் அமைச்சர் பாராட்டினையும் நன்றியையும் தெரிவித்தார்.

நியாயவிலைக் கடைக்கு வருகை தரும் பொதுமக்களிடம் கனிவுடன் நடந்து கொள்வதோடு 'பயோமெட்ரிக்' கைரேகைப் பதிவு செய்வதில் தொழில்நுட்பக் கோளாறு இருப்பின், அரசால் வழங்கப்பட்டுள்ள வழிகாட்டுதல்களைப் பயன்படுத்தி பொதுமக்களுக்குப் பொருள்களை வழங்கிட வேண்டும் என்றும் அதற்காகப் பொதுமக்களை எவ்விதத்திலும் சிரமப்படுத்தக் கூடாது என்றும் கேட்டுக் கொண்டார்.

ஆண்டு தோறும் மாநில அளவிலும் மாவட்ட அளவிலும் சிறந்த விற்பனையாளர்கள் மற்றும் கட்டுனர்களுக்குப் பரிசு தொடர்ந்து வழங்கப்படும் என்று சட்டமன்றத்தில் வெளியிடப்பட்ட அறிவிப்பிற்கிணங்க 2023 ஆம் ஆண்டுக்கான பரிசுகள் பெற வேண்டியவர்களின் பட்டியலை விரைந்து தயாரித்து வழங்கிடவும் இதை ஆண்டு தோறும் குறிப்பிட்ட நாளில் வழங்கிடவும் உரிய நடவடிக்கை எடுத்திட வேண்டும் என்றும் கூட்டத் தில் அறிவுறுத்தினார்.

அரிசி, சர்க்கரை, துவரம்பருப்பு, பாமாலின், கோதுமை மற்றும் மண்ணெண்ணெய் ஆகியவற்றை உரிய காலத்தில் நகர்வு செய்து பொதுமக்கள் எப்போது வந்து கேட்டாலும் இன்முகத்துடன் விநியோகம் செய்வதை உறுதி செய்திட வேண்டும் என்றும், மாவட்ட வழங்கல் அலுவலர்கள், பொது விநியோகத் திட்ட துணைப் பதிவாளர்கள் மற்றும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக மண்டல மேலாளர்கள் குடிமைப் பொருள் வழங்கல் மற்றும் குற்றப் புலனாய்வுத் துறை அலுவலர்களுடன் இணைந்து அரிசிக் கடத்தலை முழுமையாக நிறுத்த வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

**பகுதி நேரக் கடைகள்!**

முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டுள்ள "உங்களைத் தேடி உங்கள் ஊரில்" திட்டத்தின் கீழ் நடத்தப்படும் கூட்டங்களில் உரிய அலுவலர்கள் கலந்து கொண்டு தெரிவிக்கப்படும் குறைகளுக்கு உடனடித் தீர்வு கண்டிட வேண்டும் என்றும், தேவைப்படும் இடங்களில் பகுதிநேரக் கடைகள் திறந்திடவும் ஆயிரம் குடும்ப அட்டைகளுக்கு மேலுள்ள கடைகளைப் பிரித்திடவும் தொடர்ந்து விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும்,

வாடகைக் கட்டடங்களுக்குப் பதிலாக சொந்தக் கட்டடங்கள் அனைத்துக் கடைகளுக்கும் அமைந்திடும் வகையில் மாவட்ட நிர்வாகத்துடன் இணைந்து செயல்பட வேண்டும் என்றும் தெரிவித்தார்.

கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர், பகுதி நேரக் கடைகள் தேவைப்படும் ஊர்களில் மக்கள் பிரதிநிதிகள் கோரிக்கை வைக்காமலே அலுவலர்களே கண்டறிந்து உரிய முன்மொழிவுகளை அனுப்பி வைக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

நுகர்வோர் பாதுகாப்புப் பணிகளான விலைக் கட்டுப்பாடு, பதுக்கல் தடுப்பு, நுகர்வோர் விழிப்புப் பணிகள் போன்றவற்றிலும் குடிமைப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையினர் கவனம் செலுத்திச் செயல்பட வேண்டும் கூடுதல் தலைமைச் செயலாளர் அனைத்து அலுவலர்களும் சிறப்பாகச் செயல்பட்டு முதலமைச்சர் அவர்களும் உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்களும் அறிவித்துள்ள திட்டங்களை உரிய காலத்தில் நிறைவேற்றி பொதுமக்கள் ஏதும் கோரிக்கை வைப்பதற்கு முன்பே அவர்களின் தேவையை அறிந்து செயல்பட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

## குன்னூர் நகராட்சித் தலைவர் - கழகப் பொதுக்குழு உறுப்பினர்

# எல்.ஷீலா கேத்ரின் மறைவு!

## முதல்வர் - மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, பிப். 4-

குன்னூர் நகராட்சி தலைவரும், தலைமைக் கழக பொதுக்குழு உறுப்பினருமான திருமதி.எல்.ஷீலாகேத்ரின் (68) அவர்கள் 2.2.2024 வெள்ளிக்கிழமை மதியம் 3.30 மணியளவில் மாரடைப்பால் குன்னூரில் இயற்கை எய்தினார் என்பதனை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

இவர் இரண்டு முறை தலைமைக் கழகப் பொதுக்குழு உறுப்பினராகவும், இரண்டு முறை குன்னூர் நகராட்சி மன்ற உறுப்பினராகவும் பணியாற்றியுள்ளார். கழகத்தின் மீது மிகுந்த பாசம் கொண்டவராக கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் கலந்துகொண்டுள்ளார். இவர், சிறுபான்மை மக்கள் மத்தியில் மிகுந்த அன்பு கொண்டவராக கழக பணியாற்றி வந்தார்.

இவரது கணவர் ஏற்கனவே காலமாகிவிட்டார். இவருக்கு திருமணமான ஜோஸ்வா ஜான்சன் என்கிற மகனும், ஈவா ஜென் என்கிற மகளும் உள்ளனர்.

அன்னாரது மறைவுச் செய்தி அறிந்து, முதல்வர் – கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது ஆழ்ந்த இரங்கலை அன்னாரது குடும்பத்தாருக்குத் தெரிவித்துள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

# வே. முனியாண்டி

**பிப்ரவரி 4 (2016)**



**மாணவப் பருவத்திலேயே கழகக் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு, கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு பணியாற்றியவர்.**

**முகவை மாவட்ட மாணவர் அணிச் செயலாளர் – ஒருங்கிணைந்த மதுரை மாவட்ட அவைத் தலைவர் – திருப்பரங்குன்றம் ஒன்றியச் செயலாளர் – பொதுக்குழு உறுப்பினர் என கழகத்தில் பல்வேறு பொறுப்புகளை வகித்தவர்.**

**தலைமைக் கழகப் பேச்சாளராக செயல்பட்டு, கழகக் கொள்கைகளை தமிழகத்தில் அனைத்து பகுதிகளிலும் பிரச்சாரப் பணியாற்றினார்.**

**கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**